பிரதிப் பிரதம செயலாளர் செயலகம் – நிதி, மாகாணத் திறைசேரி
வடமாகாணம்

Deputy Chief Secretary's Secretariat –Finance
Provincial Treasury – Northern Province

නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් - මුදල් - පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

எனதுஇல :- NP/09/FRM/Sal/2007 25.01.2007

மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் - 04/2007

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

**2006ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின்படி அரசசேவையின் சம்பள மறுசீரமைப்பு.**

1. அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 6/2006 (II) ன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மேற்படி சுற்றறிக்கையின் 06ம் பந்தியின் பிரகாரம் சில சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஏற்றம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து வழங்கமுடியும். அதாவது 09.:.2004ம் சுற்றறிக்கையில் உள்ள சம்பளத்திட்டத்தின்படி பெறக்கூடிய சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 06.:.2006ல் உள்ள சம்பளத்திட்டத்திலும் வழங்கமுடியும்.

உதாரணமாக :-

காரியாலய ஊழியர்கள் தரம்(I) ல் 09/2004ன் பிரகாரம் 23 சம்பள ஏற்றங்கள் வழங்கமுடியும். ஆனால் 06.:.2006ன் பிரகாரம் 14 சம்பள எற்றங்களே வழங்கக் கூடியதாக உள்ளது. மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய சம்பளத்திட்டத்திலும் 06/2006ல் உள்ள சம்பள எற்றங்கள் தொடர்ந்து 23 வரை வழங்கமுடியும் (16,710/- வரை).

இதே போன்று சாரதி தரம்(I) ல் 09/2004ல் 17 சம்பள ஏற்றங்களும் 06/2006ல் 21 சம்பள ஏற்றங்களும் இருப்பதால் 06/2006ன் பிரகாரம் 21 சம்பள ஏற்றங்கள் வரை வழங்கமுடியும் (17,640/- வரை).

3. தங்கள் இலகுபார்வைக்காக மேற்படி சுற்றறிக்கையின் 6ம் பந்தி கீழே காட்டப்படுகிறது.

09/2004 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரொருவரின் சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கையானது, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட சம்பள ஏற்றத்தின் எண்ணிக்கையினைவிடக் கூடுதலாக இருக்கின்றவிடத்து, அந்த எண்ணிக்கைக்குள் (09/2004 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கை) உள்ளடங்கும் சம்பள ஏற்றங்கள், அந்த எண்ணிக்கையினைவிட விஞ்சாமல் வழங்கப்பட முடியும். அதேபோல, 06.:.2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கையானது குறித்ததொரு சம்பள அளவுத் திட்டத்தின் சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் 09/2004 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறித்தொதுக்கப்பட்ட சம்பள ஏற்றங்களின் எண்ணிக்கையினைவிட உயர்வாக இருந்தால்.06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய வழங்கப்பட முடியும்.

ஆ.செல்லத்துரை
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
பிரதம செயலாளருக்காக
வடமாகாணம்.

பிரதி :- 1. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு - வமா
2. கணக்காய்வாளர் நாயகம்
3. பிரதிப் பிரதம செலயாளர் - உள்ளகக் கணக்காய்வு - வமா
} தகவலுக்காக

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct 060-2264892 Fax - 026 – 2226953 General No – 060 – 2266503
E-Mail – nptreasury@sltnet.lk